பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

03 10 2025 FRIDAY 12.40 PM

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை அடையும் வகையில், நாட்டின் உற்பத்தி வளர்ச்சி விகிதம் எட்டு சதவீதமாக இருப்பது அவசியம் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.
- சமூக பாதுகாப்பு திட்டங்களை அரசு தீவிரமாக செயல்படுத்தி வருவதாக மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.
- பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன் கி பாத் நிகழ்ச்சி, இன்றுடன் 11 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.
- வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகளில் நடைமுறை சார்ந்த அணுகுமுறைகளை இந்தியா கையாண்டு வருவதாக அமெரிக்க வர்த்தக பிரதிநிதி திரு Jamieson Greer தெரிவித்துள்ளார்.
- உலக பாரா தடகள சாம்பியன் போட்டியில், இந்தியாவின் சிம்ரன் சர்மா மற்றும் shubam Juyal இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை அடையும் வகையில், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதம் எட்டு சதவீதமாக இருப்பது அவசியம் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று கௌடில்யா பொருளாதார மாநாட்டை தொடங்கிவைத்து பேசிய அவர், உலக அளவில் பொருளாதார சூழல் சரிவை சந்தித்து வரும் நிலையில், இந்தியாவின் வளர்ச்சி உள்நாட்டு காரணிகளை சார்ந்து மேம்பட்டுவருவதாக கூறினார்.

உலகளாவிய பொருளாதார அழுத்தங்களை எதிர்கொள்ளும் வகையில், நாட்டின் திறன் வலுவான நிலையில் உள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் பொருளாதாரம் மீள் தன்மை கொண்டதாகவும், தொடர்ந்து நிலையான வளர்ச்சியை கண்டு வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

*புவி அரசியல் ரீதியாக பல்வேறு பிரச்சினைகளை உலக நாடுகள் எதிர்கொண்டு வரும் நிலையில், தற்போதைய தேவைகளுக்கு தீர்வுகாணும் வகையில், உலகளாவிய அமைப்புகள் சீர்திருத்தங்களை மேற்கொள்ள முன்வர வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.*

*நாட்டை வளர்ச்சிப்பாதைக்கு அழைத்து செல்வதில் சுயசார்பு இந்தியா இயக்கம் முக்கிய பங்கு வகிப்பதாக திருமதி நிர்மலா சீதாராமன் கூறினார்.*

*<<<<<>>>>>*

*கடந்த 11 ஆண்டுகளாக சமூக பாதுகாப்பு திட்டங்களை அரசு தீவிரமாக செயல்படுத்தி வருவதாக மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.*

*மலேசியாவின் கோலாலம்பூரில் உலக சமூக பாதுகாப்பு மன்றம் நடத்திய விழாவில் சமூக பாதுகாப்பில் சிறந்த சாதனைக்கான விருதினை மத்திய அரசின் சார்பில் அவர் பெற்றுக்கொண்டார்.*

*இந்த விழாவில் பேசிய அமைச்சர், இந்திய அரசின் சமூக பாதுகாப்புத் திட்டங்கள் 94 கோடி மக்களை சென்றடைந்திருப்பதாக சர்வதேச தொழிலாளர் அமைப்பு பாராட்டியுள்ளதை சுட்டிக்காட்டினார்.*

*விரிவான கொள்கைகள், செயல்முறை மற்றும் டிஜிட்டல் சீர்திருத்தங்கள் மூலமாக சமூக பாதுகாப்பை வலுப்படுத்தும் நடவடிக்கைகளை பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்தார்.*

*தொழிலாளர் ஈட்டுறுதிக்கழகம் மற்றும் தொழிலாளர் அரசு காப்பீட்டு நிறுவனம் ஆகியன தொழிலாளர் நலன் சார்ந்த அம்சங்களை செயல்படுத்துவதில் முன்னிலை வகிப்பதாக டாக்டர் மன்சுக் மாண்டவியா குறிப்பிட்டார்.*

*<<<<<>>>>>*

*பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன் கி பாத் நிகழ்ச்சி, 11 ஆண்டுகளை இன்றுடன் நிறைவு செய்துள்ளது.*

*கடந்த 2014-ஆம் ஆண்டு விஜயதசமியையொட்டி, இதேநாளில் இந்நிகழ்ச்சி முதல் முறையாக அகில இந்திய வானொலியில் ஒலிபரப்பானது.*

தற்போது இந்த நிகழ்ச்சி 126 பகுதிகளை கடந்துள்ளது.

வானொலி நிகழ்ச்சியாக மட்டுமல்லாமல், கலாச்சாரம் மற்றும் சமூக பரிமாற்றத்திற்கான அடையாளமாக இந்நிகழ்ச்சி திகழ்கிறது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

நாட்டின் ஒவ்வொரு பகுதியையும், இந்நிகழ்ச்சி சென்றடைந்திருப்பதாகவும், அரசுக்கும், மக்களுக்கும் இடையேயான நேரடி உரையாடலை இது உருவாக்கி இருப்பதாகவும் அது கூறியுள்ளது.

சமூக மாற்றங்களை ஊக்குவிப்பதாகவும், தேசிய ஒற்றுமையை வலுப்படுத்துவதாகவும் மன் கி பாத் நிகழ்ச்சி திகழ்வதாக மத்திய அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

சிங்கப்பூர் பிரதமர் திரு லாரன்ஸ் Wong உடனான பேச்சுவார்த்தை ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூரில் இன்று திரு லாரன்ஸ் Wong-கை சந்தித்து பேசிய அவர், தமது சமூக வலைதள பதிவில் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் வான்வெளி சூழல் அமைப்பை ஊக்குவிக்கும் வகையில், கண்டுபிடிப்புகள், திறன் மேம்பாடு, முதலீட்டில் ஒருங்கிணைப்பை மேற்கொள்வது தொடர்பாக இப்பேச்சுவார்த்தையில் விவாதிக்கப்பட்டதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதற்கு பதிலளித்துள்ள திரு லாரன்ஸ் Wong, செயற்கை நுண்ணறிவு முதல், தொழில்நுட்ப பூங்கா மேம்பாடு வரை பல்வேறு பொருளாதார அம்சங்களில் இருதரப்பு உறவை வலுப்படுத்தும் விதமாக இந்த பேச்சு அமைந்திருந்ததாக கூறியுள்ளார்.

<<<<<>>>>>

இந்தியா – ஜெர்மனி இடையேயான இருதரப்பு நல்லுறவு 25 ஆண்டுகளை நிறைவு செய்திருப்பதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ஜெர்மனி நாட்டின் தேசிய ஒற்றுமை தினத்தையொட்டி, அவர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் இதனை குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

*சுதந்திரப் போராட்ட வீரரும், தமிழறிஞருமான ம பொ சிவஞானம் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.*

*இதையொட்டி, தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட காலக்கட்டத்தில், தமிழகத்திற்கான உரிமைகளை போராடி பெற்றதில் பெரும் பங்கு வகித்தவர் ம பொ சிவஞானம் என்று புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.*

*<<<<<>>>>>*

*நாடு முழுவதும் மகளிர் பயனடையும் வகையில் பல்வேறு சமூக நலத்திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது.*

*அதன் ஒருபகுதியாக செயல்படுத்தப்படும் பிரதமரின் உஜ்வாலா திட்டத்தின்கீழ், தற்போது பண்டிகை காலத்தை முன்னிட்டு, கூடுதலாக 25 லட்சம் இலவச சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்கப்படுகின்றன.*

*இத்திட்டமானது தங்களுக்கு மிகுந்த பயனை அளித்து வருவதாக தமிழகத்தின் நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த பயனாளிகள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.*

*(Sound Byte – பயனாளிகள் – 38 Sec. )*

*<<<<<>>>>>*

*தமிழகம் முழுவதும் சமூக நீதி விடுதிகளில் அனைத்து வசதிகளும் மேம்படுத்தப்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு மதிவேந்தன் தெரிவித்துள்ளார்.*

*திருச்சியில் கட்டப்பட்டுவரும் கல்லூரி மாணவிகள் விடுதியை ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதனை தெரிவித்தார்.*

*தமிழகத்தில் உள்ள மாணவ, மாணவியர் விடுதிகளில் குறைகள் இருப்பதாக கூறினால், அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் கூறினார்.*

*<<<<<>>>>>*

*வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகளில் நடைமுறை சார்ந்த அணுகுமுறைகளை இந்தியா கையாண்டு வருவதாக அமெரிக்க வர்த்தக பிரதிநிதி திரு Jamieson Greer தெரிவித்துள்ளார்.*

நியூயார்க்கில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்று பேசிய அவர், இந்தியா - அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தைகளை இருநாடுகளும் தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக கூறினார்.

ரஷ்யாவிலிருந்து இந்தியா கச்சா எண்ணெய் வாங்கும் விவகாரம் தொடர்பாக பேசிய அவர், யுக்ரைனில் போர் முடிவுக்கு வர வேண்டும் என்ற அமெரிக்காவின் நிலைப்பாட்டை இந்தியா புரிந்துகொள்ளும் என்று தாம் நம்புவதாக குறிப்பிட்டார்.

இந்தியா மட்டுமல்லாமல், பல ஐரோப்பிய நாடுகள் மற்றும் சீனா மீதும் இதே அணுகுமுறையை அமெரிக்கா மேற்கொண்டு வருவதாக திரு *Jamieson Greer* கூறினார்.

கடந்த மாதம் 22-ஆம் தேதியன்று, மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல், திரு *Jamieson Greer*-ஐ சந்தித்து பேசிய நிலையில், தற்போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

<<<<>>>>>

லெபனான் பாதுகாப்புப் படைகளுக்கு 230 மில்லியன் டாலர் நிதியுதவி வழங்க அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் ஒப்புதல் தெரிவித்துள்ளார்.

லெபனான் நாட்டில் ஹிஸ்புல்லா அமைப்பை முடக்கும் வகையில், இந்த நிதியுதவி அளிக்கப்படுவதாக அமெரிக்க அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லெபனான் ஆயுதப்படையினருக்கு 190 மில்லியன் டாலரும், உள்நாட்டு பாதுகாப்புப் படையினருக்கு 40 மில்லியன் டாலரும் வழங்கப்படுவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதையடுத்து, லெபனான் படையினர் அந்நாட்டின் பாதுகாப்பை உறுதிபடுத்தும் நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டும் என்று அதிபர் திரு ஜோசப் *Aoun* மற்றும் பிரதமர் திரு நவாப் சலாம் வலியுறுத்தியுள்ளனர்.

இதற்கிடையே, இஸ்ரேல் – காஸா இடையேயான மோதல் முடிவுக்கு வராத நிலையில், ஆயுதப்போராட்டத்தை கைவிட தயாராக இல்லை என்று ஹிஸ்புல்லா அமைப்பு தெரிவித்துள்ளது.

<<<<>>>>>

உலக பாரா தடகள சாம்பியன் போட்டியில், இந்தியாவின் சிம்ரன் சர்மா மற்றும் *shubam Juyal* இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

*புதுதில்லியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின், 100 மீட்டர் ஓட்டத்தில் சிம்ரன் சர்மா இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*குண்டு எரிதல் பிரிவில் shubam Juyal-லும் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*<<<<<>>>>>*

*வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது நாளான இன்று இந்தியா முதல் இன்னிங்சில் சற்றுமுன்வரை 4 விக்கெட் இழப்பிற்கு 262 ரன் எடுத்துள்ளது.*

*அகமதாபாதில் நடைபெற்று வரும் இப்போட்டியில் வெஸ்ட் இன்டீஸ் முதல் இன்னிங்சில் 162 ரன் எடுத்துள்ளது.*

*<<<<<>>>>>*

*இந்தியா ஏ – ஆஸ்திரேலியா ஏ இடையேயான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.*

*கான்பூரில் இப்போட்டி பிற்பகல் மணி 1.30-க்கு தொடங்குகிறது.*

*<<<<<>>>>>*

*அமெரிக்காவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Dhakshineswar Suresh – அமெரிக்காவின் Andrew Delgado இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*<<<<<>>>>>*